Insert your school crest here

**_Tell Them From Me_ student survey:**

**Information for parents and consent form for parents and carers**

# *டெல் தெம் ஃப்ரம் மீ* மாணவர் கருத்து கணிப்பு:

# பெற்றோர் மற்றும் கவனித்துக் கொள்பவர்களுக்கான தகவல் மற்றும் ஒப்புதல் படிவம்

## கல்விப் புள்ளியியல் மற்றும் மதிப்பாய்விற்கான மையம்

அன்பான பெற்றோர் மற்றும் கவனித்துக் கொள்பவர்களே

இந்தக் கல்விப் பருவத்தில், நமது பாடசாலை *டெல் தெம் ஃப்ரம் மீ (Tell Them From Me)* என்ற மாணவர் கருத்து கணிப்பில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. இக்கருத்து கணிப்பு, பாடசாலை வாழ்க்கை குறித்து நமது மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள், பாடசாலையில் அவர்கள் எந்தளவிற்கு ஈடுபாட்டோடு இருக்கிறார்கள், மற்றும் ஆசிரியர்கள் அவர்களோடு ஈடுபடும் பல்வேறு வழிகள் ஆகியவை குறித்த மதிப்புமிக்க பின்னூட்டக் கருத்தினை எங்களுக்கு வழங்கும். ஆஸ்திரேலியாவிலும், உலகெங்கிலும் உள்ளதுமான பாடசாலைகள், தங்களை மேம்படுத்திக் கொள்ள உதவுவதற்காக இந்த *டெல் தெம் ஃப்ரம் மீ (Tell Them From Me)* என்ற கருத்து கணிப்பினையே உபயோகித்திருக்கின்றன. இக்கருத்து கணிப்பை ஆன்-லைனிலேயே பூர்த்தி செய்கிறோம் அதோடு, இதனை **The Learning Bar** என்றதோர் தனிப்பட்ட ஆராய்ச்சி நிறுவனமே நடத்துகிறது, இந்நிறுவனம் பாடசாலை-அடிப்படையிலான கருத்து கணிப்புகளில் நிபுணத்துவம் பெற்றதாகும்.

அந்தந்த மாணவர்கள் அளிக்கும் பதில்களிலிருந்து அம்மாணவர்களை பாடசாலையில் உள்ள ஊழியர்களால் அடையாளம் காண **இயலாது**. இரகசியத்தன்மையை உறுதி செய்வதற்காக, இதில் பங்கேற்கும் மாணவர்கள் ஓர் தனித்துவமான பயனர்பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பெற்றுக் கொள்வார்கள். ஓர் கேள்விக்கு ஐந்து மாணவர்களையும் விடக் குறைந்த மாணவர்களே பதிலளிக்கிற இடங்களில், அக்கேள்விக்கான முடிவுகளை வெளியிடமாட்டோம். இக்கருத்து கணிப்பை நிறைவு செய்வதற்கு சாதாரணமாக 30 நிமிடங்கள் அல்லது அதனை விடக் குறைவான நேரமே எடுக்கின்றது அதோடு இக்கருத்து கணிப்பினை சாதாரண பாடசாலை நேரங்களின் போது, பாடசாலையே நடத்திவிடும். மாணவர்கள் இக்கருத்து கணிப்புகளை பூர்த்தி செய்ததும், இது குறித்த அறிக்கைகளைத் தயாரித்து, அவற்றைப் பெரும்பாலான நிலைகளில், மூன்று அலுவல் நாட்களுக்குள்ளாகவே பாடசாலைகளுக்குக் கிடைக்குமாறு செய்து விடுவோம்.

இந்தக் கருத்து கணிப்பு, மாணவர்களின் நலனையும், அவர்களின் ஈடுபாட்டையும் எவ்விதம் மேம்படுத்துவது என்பது குறித்து நமது பாடசாலை இன்னும் நன்றாகப் புரிந்து கொள்ள உதவிபுரியும். இது, மாணவர்களில் ஏற்படுத்துகிற விளைவுகளை மேம்படுத்துவதற்கு என்னென்ன விதமான விஷயங்கள் பலன் தருகின்றன என்பதை இனங்காணவும் உதவு புரியும்.

இக்கருத்து கணிப்பில் பங்கேற்பது என்பது முற்றிலும் தன்னார்வத்தினாலானதாகும். நீங்களோ அல்லது உங்கள் குழந்தையோ இதில் பங்கேற்க விரும்பாத பட்சத்தில், உங்கள் குழந்தை இதில் பங்கெடுக்க மாட்டார்.

**உங்கள் குழந்தை இக்கருத்து கணிப்பில் பங்கெடுப்பது** உங்களுக்குப் **பிடிக்கவில்லை** என்றால், தயவுசெய்து இத்துடன் இணைத்துள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, அதனை delete and insert date of return தேதிக்குள் பாடசாலைக்குத் திருப்பி அனுப்பி வைத்து விடுங்கள்.

இக்கருத்து கணிப்பு மற்றும் ஆராய்ச்சி குறித்த இன்னும் அதிகத் தகவல்கள், கல்விப் புள்ளியியல் மற்றும் மதிப்பாய்விற்கான மையத்தின் (Centre for Education Statistics and Evaluation - CESE) இணையதளத ஆ மொழியில கிடைக
education.nsw.gov.au/ttfm

delete and insert name of principal
முதல்வர் (Principal)

delete and insert name of school

## *Tell Them From Me* Student Feedback Survey non-consent form

## *டெல் தெம் ஃப்ரம் மீ*
## மாணவர் பின்னூட்டக் கருத்து கணிப்பு ஒப்புதல்-அளிக்கா படிவம்

**தயவுசெய்து ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யவும்**

உங்கள் குழந்தை இம்மாணவர் பின்னூட்டக் கருத்து கணிப்பில் பங்கெடுப்பது உங்களுக்குப் **பிடிக்கவில்லை** என்றால், தயவுசெய்து இந்தப் படிவத்தில் கையொப்பமிட்டு இதனை delete and insert date of return தேதிக்குள் பாடசாலைக்குத் திருப்பி அனுப்பி வைத்து விடுங்கள்.

**I DO NOT** give consent for my child/children to participate in the ***Tell Them From Me* student feedback survey.**

*டெல் தெம் ஃப்ரம் மீ* **மாணவர் பின்னூட்டக் கருத்து கணிப்பில்** எனது குழந்தை/குழந்தைகள் பங்கேற்பதற்கான ஒப்புதலை நான் **கொடுக்கவில்லை**.

| | |
|---|---|
| மாணவர்/களின் பெயர் 1<br>Name of student 1 | மாணவரின் வகுப்பு 1<br>Roll class of student 1 |
| மாணவர்/களின் பெயர் 2<br>Name of student 2 | மாணவரின் வகுப்பு 2<br>Roll class of student 2 |
| மாணவர்/களின் பெயர் 3<br>Name of student 3 | மாணவரின் வகுப்பு 3<br>Roll class of student 3 |
| மாணவர்/களின் பெயர் 4<br>Name of student 4 | மாணவரின் வகுப்பு 4<br>Roll class of student 4 |

Name of parent/carer ..............................................
பெற்றோர்/கவனித்துக் கொள்பவரின் பெயர்
(தயவுசெய்து அச்சிடுங்கள்)

Signature of parent/carer ..............................................
பெற்றோர்/கவனித்துக் கொள்பவரின் கையொப்பம்

Date ..............................
தேதி